உடலை வளர்க்க குடலைக் கழுவு! குடலைக் கழுவி உடலை வளர்!

காந்தலாக்ஸ்

பேதி மாத்திரைகள்

மலச்சிக்கல், நீடித்த மலச்சிக்கல், மலச்சிக்கலால் வயிற்றுவலி, வயிற்று இரைச்சல், வயிற்று உப்பிசம், அஜீரணம், புளித்த ஏப்பம், அதிக உஷ்ணம், பித்தம், வாய்வு மற்றும் கீரைப்பூச்சிகள், நாக்குப் பூச்சிகள் நச்சுப் பொருட்கள் வெளியேறி குடல் தூய்மை பெறுகிறது.

Mfrs : டாக்டர் கே.எஸ்.& சன்ஸ் கும்பகோணம்-612 001.
போன் : (0435) 242 1196, (0435) 242 0005.

எல்லா ஊர் மருந்து கடைகளிலும் கிடைக்கும்

தினமணி

புதன்கிழமை, 21 செப்டம்பர் 2022

ஞாயிறுக்கிழமைதோறும்

தினமணியுடன்...

தினமணி கதிர்

படியுங்கள்

இளமை!
புதுமை!
இனிமை!

11 தமிழக மீனவர்களை விடுவிக்க வேண்டும்

மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, செப். 20: இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 11 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.



இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு செவ்வாய்க்கிழமை அவர் எழுதிய கடிதம்:

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் செவ்வாய்க்கிழமை பிடித்துச் செல்லப்பட்டனர். அவர்களின் விசைப் படகும் பறிமுதல் செய்யப்பட்டது. ஏற்கெனவே, 11 மீனவர்கள் 95 மீன்பிடி படகுகளுடன் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளனர். அண்மையில் வெளியுறவுத் துறை அமைச்சகம் சார்பில் எடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சிகள் காரணமாக 12 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டதற்கு நன்றி தெரிவிக்கிறேன். இப்போது கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் விரைவில் விடுவிக்க உரிய தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தமிழகத்தில் போதைப் பொருள் புழக்கம் அதிகரிப்பு

அமித் ஷாவிடம் எடப்பாடி பழனிசாமி புகார்

நமது சிறப்பு நிருபர்

புதுதில்லி, செப். 20: தமிழகத்தில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளது; இதுகுறித்து தற்போதைய திமுக அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டும் நடவடிக்கை எடுக்காத நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து புகார் அளிக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.

அதிமுகவின் இடைக்கால பொதுச் செயலாளரான எடப்பாடி கே.பழனிசாமி, ஒரு நாள் பயணமாக திங்கள்கிழமை இரவு தில்லி வந்தார். அவர், முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி. வேலுமணி, சி.வி.சண்முகம் எம்.பி. ஆகியோருடன் தில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை அவரது அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை காலையில் சந்தித்துப் பேசினார்.

தில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை செவ்வாய்க்கிழமை சந்தித்த முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி. உடன், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, சி.வி. சண்முகம்.

இதையடுத்து தில்லி பொதிகை தமிழ்நாடு இல்லத்தில் செய்தியாளர்களிடம் எடப்பாடி கே. பழனிசாமி கூறியதாவது:

மத்திய உள்துறை அமைச்சரை நாங்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தோம். இருப்பினும், தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும் நலன்களுக்காகவும் முக்கிய விவகாரங்களை அவரது கவனத்துக்கு கொண்டு சென்றோம். நான் முதல்வராக இருந்த போதே 2 திட்டங்களை நிறைவேற்றக் கோரி பிரதமரை வலியுறுத்தி வந்தேன்.

தமிழகத்தின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் முக்கியத் திட்டம் கோதாவரி - காவிரி இணைப்பு ஆகும். அது இப்போது டிபிஆர் (விரிவான திட்ட அறிக்கை) தயாரிப்புப் பணி அளவில் இருப்பதாக அறிகிறேன். இதை வேகப்படுத்தி திட்டத்தை நிறைவேற்றக் கோரினோம். இரண்டாவது கங்கை புனரமைப்பு திட்டத்தை போன்று, 'நடந்தாய் வாழி காவிரி' திட்டம் குறித்தும் அதிமுக ஆட்சியில் கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்த இரு திட்டங்களையும் மத்திய அரசு விரைந்து நிறைவேற்ற வேண்டுமென உள்துறை அமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கைகளை உரிய முறையில் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாக உள்துறை அமைச்சர் தெரிவித்தார். தமிழகத்தில் தற்போது சட்டம் - ஒழுங்கு முற்றிலும் சீரழிந்துள்ளது. அனைத்து இடங்களிலும் போதைப் பொருள் தடையின்றி கிடைக்கிறது. அதனால், மாணவர்கள், இளைஞர்கள் சீரழிந்து வருவது குறித்து அமைச்சர் அமித் ஷாவிடம் எடுத்துக் கூறினோம். இது குறித்து ஏற்கெனவே பலமுறை சட்டப்பேரவையில் தற்போதைய முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளேன்.

கட்சி ரீதியாகவும் அறிக்கை வெளியிட்டும், அது குறித்து எந்த நடவடிக்கையையும் தமிழக அரசு எடுக்கவில்லை.

அரசின் அலட்சியத்தால், தமிழகம் முழுவதும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனை பெருவாரியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விஷயத்தில் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியதால், மத்திய உள்துறை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம் என்றார் அவர். பின்னர், அவர் மாலையில் சென்னை திரும்பினார்.

ஆயுஷ் படிப்புகளுக்கு இன்று முதல் விண்ணப்பப் பதிவு

சென்னை, செப். 20: சித்தா, ஆயுர்வேத, யுனானி, ஹோமியோபதி (பிஎஸ்எம்எஸ், பிஏஎம்எஸ், பியுஎம்எஸ், பிஎச்எம்எஸ்) ஆகிய பாரம்பரிய மருத்துவப் படிப்புகளில் நிகழாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்ப விநியோகம் புதன்கிழமை தொடங்குகிறது. www.tnhealth.tn.gov.in என்ற தமிழ்நாடு சுகாதாரத் துறை இணையதளத்தில் விண்ணப்பப்பதிவு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகள் அரசு ஒதுக்கீடு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டுக்கான விண்ணப்பங்கள் மற்றும் தகவல் தொகுப்புகளை அக்டோபர் 12-ஆம் தேதி மாலை 5 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை தகுந்த ஆவணங்களுடன் அக்டோபர் 12-ஆம் தேதி மாலை 5.30 மணிக்கு செயலாளர், தேர்வுக்குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை இயக்குநர், அலுவலகம், அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை - 600106 என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும்.

ராமேசுவரம் மீனவர்கள் விரட்டியடிப்பு

ராமேசுவரம், செப். 20: ராமேசுவரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை, கச்சத்தீவு அருகே இலங்கைக் கடற்படையினர் விரட்டியடித்தனர். இதனால், மீனவர்கள் மீன்பிடிக்க முடியாத நிலையில், பெரும் பொருளாதார இழப்புடன் செவ்வாய்க்கிழமை கரை திரும்பினர்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ராமேசுவரம் மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி, ராமேசுவரம் மீனவர்கள் கடந்த 11 நாள்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதிகாரிகளின் பேச்சுவார்த்தையையடுத்து திங்கள்கிழமை போராட்டத்தை திரும்பப் பெற்றனர்.

இதையடுத்து, 450-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 3,500-க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்வளத் துறை அனுமதி பெற்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

கச்சத்தீவு அருகே நள்ளிரவு மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அங்கு ரோந்துப் பணிக்கு வந்த இலங்கைக் கடற்படையினர், ராமேசுவரம் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர். இதனால், மீனவர்கள் மீன்பிடிக்க முடியாத நிலையில் கரை திரும்பினர்.

ஆஸ்கருக்கான இந்தியாவின் அதிகாரபூர்வ பரிந்துரை 'செல்லோ ஷோ'

புது தில்லி, செப். 20: ஆஸ்கர் விருதுக்கான இந்தியாவின் அதிகாரபூர்வ பரிந்துரையாக குஜராத்தி மொழியின் 'செல்லோ ஷோ' திரைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

95-ஆவது ஆஸ்கர் விழா 2023-ஆம் ஆண்டு மார்ச் 12-ஆம் தேதி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் நடைபெறவுள்ளது. அந்த விழாவுக்காக இந்தியா சார்பில் அனுப்பப்படும் திரைப்படத்தைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகளை இந்திய திரைப்படக் கூட்டமைப்பு (எஃப்எஃப்ஐ) மேற்கொண்டு வந்தது.

ஆஸ்கர் விழாவுக்கான இந்தியாவின் அதிகாரபூர்வ பரிந்துரையாக 'செல்லோ ஷோ' திரைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக எஃப்எஃப்ஐ தலைவர் டி.பி.அகர்வால் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், "பல்வேறு மொழிகளைச் சேர்ந்த 13 திரைப்படங்கள் ஆய்வு செய்யப்பட்டன. பிரம்மாஸ்த்ரா, தி காஷ்மீர் ஃபைல்ஸ், அனேக், ஜுண்ட், பதாய் ஹோ, ராக்கெட்ரி ஆகிய ஹிந்தி திரைப்படங்களும், இரவின் நிழல் (தமிழ்), ஆர்ஆர்ஆர் (தெலுங்கு), அபராஜிதோ (வங்கமொழி), செல்லோ ஷோ (குஜராத்தி) உள்ளிட்டவையும் ஆய்வு செய்யப்பட்டன. இறுதியில் செல்லோ ஷோ திரைப்படத்தை அதிகாரபூர்வமாகப் பரிந்துரைக்க குழுவின் அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக ஒப்புதல் தெரிவித்தனர்" என்றார்.

படத்தின் கதைக்களம்: குஜராத்தின் கிராமப்புறத்தில் வசிக்கும் 9 வயது சிறுவன், திரைப்படங்கள் மீது ஆர்வம்கொண்டு திரையரங்கில் உள்ள ஊழியர்களுக்குக் குறைந்த பணத்தைக் கொடுத்து புரொஜக்ஷன் அறையில் இருந்து திரைப்படங்களைக் கண்டு கோடைக்காலத்தைக் கழிப்பதை அடிப்படையாகக் கொண்டு 'செல்லோ ஷோ' திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

பான் நளின் இப்படத்தை இயக்கியுள்ளார். சித்தார்த் ராய் கபூர் தயாரித்துள்ளார். அப்படம் அக்டோபர் 14-ஆம் தேதி திரைக்கு வரவுள்ளது.

கடந்த காலத்தில்...: நடப்பு ஆண்டு ஆஸ்கர் விழாவுக்காக 'கூழாங்கல்' திரைப்படம் இந்தியா சார்பில் அதிகாரபூர்வமாகப் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஆனால், விழாவுக்கான முதல் 5 படங்கள் பட்டியலில் அப்படம் இடம்பெறவில்லை. கடைசியாக ஆமீர் கானின் 'லகான்' (2001) திரைப்படமே ஆஸ்கரின் முதல் 5 படங்கள் பட்டியலில் இடம்பெற்றது. மதர் இந்தியா (1958), சலாம் பாம்பே (1989) ஆகிய படங்களும் ஆஸ்கரின் முதல் 5 படங்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

தனுஷ்கோடிக்கு 12 அகதிகள் வருகை

ராமேசுவரம், செப். 20: இலங்கையிலிருந்து படகு மூலம் 6 குழந்தைகள் உள்பட 12 அகதிகள் தனுஷ்கோடிக்கு செவ்வாய்க்கிழமை வந்தனர்.

தனுஷ்கோடி அருகே மணல் திட்டில் அகதிகள் இருப்பதாக மீனவர்கள் தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, இந்திய கடலோரக் காவல் படைக்குச் சொந்தமான ஹோவர்கிராப்ட் கப்பல் மூலம் மணல் திட்டில் தவித்த 3 பெண்கள், 3 ஆண்கள், 6 குழந்தைகள் என 12 பேரையும் மீட்டு தனுஷ்கோடி கடற்கரைக்கு அழைத்து வந்தனர். அங்கு தமிழக கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைத்தனர்.

தமிழக கடலோரப் பாதுகாப்புக் குழும ஆய்வாளர் கனகராஜ், சார்பு-ஆய்வாளர் காளிதாஸ் விசாரணைக்குப் பிறகு அகதிகள் 12 பேரும், மண்டபம் இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

CHANGE OF NAME

I, **DIVYA A**
Spouse of Sergeant
Arivazhagan K,
resident of No. 65, 8th Main
Street, Vallalar Nagar,
Pattabiram, Chennai,
Tamilnadu-600 072,
have changed my name from
DIVYA A to **DIVYA U**
vide affidavit dated
19.09.2022 before Notary,
District Court, Cuddalore.
- Divya A

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின்,
கொரமங்களா 6வது ப்ளாக், கொரமங்களா, பெங்களூர்-560095.

கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் / அடமானதாரர்களுக்கான கோரிக்கை அறிவிப்பு

Reg: பின்வருபவர்களின் கடன் கணக்கில் உள்ள கடன் தொகையை திரும்ப பெறுவதற்கான பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு.

வ.எண்.1: (திருவண்ணாமலை கிளை): கடன்தாரர்/சக-கடன்தாரர்/அடமானதாரர்: 1.Mr.M.கார்த்திக், S/o.மாதவன், பழைய எண்.77, 2வது குறுக்கு, புதிய எண்.4, NGR லேஅவுட், ரூபினா அக்ரஹாரா, ஷரவதி அப்பார்ட்மெண்ட், பெங்களூர், கர்நாடகா-560068. **2.Mr.மாதவன்,** S/o.ஏழுமலை, **3.Mrs.செல்வி,** W/o.மாதவன், இருவரது முகவரி: எண்.14D, புதிய எண்.859, வாட்டர் டேங்க், ஆதிதிராவிடர் காலனி, குன்னத்தூர், போளூர், திருவண்ணாமலை, தமிழ்நாடு-606803.;

SARFAESI சட்டத்தின் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி: 30.04.2022; NPA தேதி: **10.02.2022;** Nature of Loan: **Home Equity Loan (Loan A/c No. 1170210170000014)**-ரூ.**6,50,000/-;** கடன் நிலுவைத்தொகை **28.04.2022** அன்றுள்ளபடி ரூ.**6,51,086/-** (ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து எண்பத்து ஆறு மட்டும்) இந்த தொகையுடன் 29.04.2022 முதல் ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி இதர செலவுகள்.

சொத்து விபரம்: போளூர் சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட **சர்வே எண்.421/10, பழைய சர்வே எண்.421/1, குன்னத்தூர் கிராமம், போளூர் தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம் என்னும் முகவரியில் 1248 சதுர அடி நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள RCC கூரையிட்ட வீடு,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக 26 அடி, வடக்கு தெற்காக கிழக்கு திசையில் 50 அடி, மேற்கு திசையில் 46 அடி. எல்லைகள்: கிழக்கு: ஏழுமலை வீடு, மேற்கு : சுந்தரவடிவேல் நிலம், வடக்கு : துரைராஜ் நிலம், தெற்கு: தெரு.

மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது **Mr.மாதவன்-க்கு சொந்தமானது (உங்களில் எண்.2-ல் உள்ள நபர்).**

வ.எண்.2: (பாண்டிச்சேரி கிளை): கடன்தாரர்/சக-கடன்தாரர்/அடமானதாரர்: 1.Mr.K.குமரன், S/o.கேசவன், **2.Mrs.V.அனிதா,** W/o.K.குமரன், இருவரது முகவரி: எண்.3/76, மாரியம்மன் கோவில் தெரு, மொரட்டாண்டி, வானூர் தாலுகா, ஆரோவில், விழுப்புரம், தமிழ்நாடு-605101.;

SARFAESI சட்டத்தின் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி: 18.06.2022; NPA தேதி: **10.04.2022;** Nature of Loan: **Home Equity Loan (Loan A/c No. 1197210170000036)**-ரூ.**7,00,000/-;** கடன் நிலுவைத்தொகை **16.06.2022** அன்றுள்ளபடி ரூ.**8,73,848/-** (ரூபாய் எட்டு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து எண்ணூற்று நாற்பத்து எட்டு மட்டும்) இந்த தொகையுடன் 17.06.2022 முதல் ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி இதர செலவுகள்.

சொத்து விபரம்: திண்டிவனம் பதிவு மாவட்டம், வானூர் சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட **கிராம நத்தம் பழைய சர்வே எண்.197/2, தற்போது புதிய சர்வே எண்.218/-0.82.0 ஏர்ஸ், திருச்சிற்றம்பலம் கிராமம் (மொரட்டாண்டி), திருச்சிற்றம்பலம் ஊராட்சி எல்லை, விழுப்புரம் மாவட்டம் என்னும் முகவரியில் 202 சதுர மீட்டர் அதற்கு சமமாக 2208 சதுர அடி காலி மனை,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். (நத்தம் நில வரி மதிப்பீடு மறு சர்வே எண்.355/1-ன் படி). அளவுகள்: கிழக்கு மேற்காக 38.8 அடி, தெற்கு வடக்காக 57 அடி). எல்லைகள்: தெற்கு: தெரு, வடக்கு : காலி மனை, காத்தமுத்து மனை, கிழக்கு : ஞானகுமார மனை, மேற்கு: கலியாண் மனை.

மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது **Mr.K.குமரன்-க்கு சொந்தமானது (உங்களில் எண்.1-ல் உள்ள நபர்).**

வ.எண்.3: (பாண்டிச்சேரி கிளை): கடன்தாரர்/சக-கடன்தாரர்/அடமானதாரர்: 1.Mr.C.குமரன், S/o.சந்திரசேகரன், **2.Mrs.K.சங்கரி,** W/o.C.குமரன், **3.Mrs.சாவித்ரி,** W/o.சந்திரசேகரன். அனைவரது முகவரி: எண்.45, மாரியம்மன் கோவில் தெரு, முத்திரைபாளையம், பாண்டிச்சேரி-605009.;

SARFAESI சட்டத்தின் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி: 30.04.2022; NPA தேதி: **03.01.2022;** Nature of Loan: **Loan against Property (Loan A/c No.1197210090000007)**-ரூ.**13,50,000/-;** கடன் நிலுவைத்தொகை **07.04.2022** அன்றுள்ளபடி ரூ.**13,41,855/-** (ரூபாய் பதிமூன்று லட்சத்து நாற்பத்து ஓராயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஐந்து மட்டும்) இந்த தொகையுடன் 08.04.2022 முதல் ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி இதர செலவுகள்.

சொத்து விபரம்: கடலூர் பதிவு மாவட்டம், புதுப்பேட்டை சார்பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட **கரும்பூர் (M) குச்சிப்பாளையம் கிராமம், என்னும் முகவரியில் புதிய சர்வே எண்.113/4-ஹெக்டேர் 0.33.5 ஏர்ஸ், புதிய சப் டிவிஷன் எண்.113/4A & 113/4D, பழைய சர்வே எண்.441/1-ல் ஏக்கர் 0.80 சென்ட் இதில் ஏக்கர் 0.10 சென்ட் 4360 சதுர அடி அதனுடன் RCC கட்டிடம்.** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: ஆண்டாள்சங்கிருஷ்ணன் நிலத்திற்கு தெற்கு, தேவகி நிலத்திற்கு மேற்கு, வழிப்பாதைக்கு வடக்கு, சீதாராமன் நிலத்திற்கு கிழக்கு.

மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது **Mrs.C.சாவித்ரி-க்கு சொந்தமானது (உங்களில் எண்.3-ல் உள்ள நபர்).**

மேற்கண்ட கடன்தாரர்கள், சக-கடன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் கீழ் (சட்டம்) மேற்குறிப்பிட்டுள்ள கடனுக்கு ஈடாக சொத்துக்களை அடமானம் வைத்ததன் பேரில் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் வங்கி லிமிடெட், பல்வேறு கிளைகளிலிருந்து கடன்வசதிப்பெற்று அதனை முறையாக திருப்பிச் செலுத்தாமலிருக்கும் கடன்தாரர்கள், சக-கடன்தாரர்கள், அடமானதாரரிடமிருந்து கடன்பாக்கியை வசூலிப்பதற்கான நடவடிக்கையை வங்கி எடுத்துள்ளது. இந்நிலையில் மேற்சொன்ன கடன் கணக்கு வாராக்கடன் (NPA) என்ற பிரிவில் சேர்க்கப்பட்டு விட்டது. மேற்படி சட்டம் பிரிவு 13(2)-ன்கீழ் மேற்கண்ட தேதிகளன்று அளிக்கப்பட்ட கேட்பு அறிவிப்பானது பதிவு அஞ்சல் / கூரியர் / அதிவேக அஞ்சலில் மேற்படி கடன்தாரர்கள், சக-கடன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கு அவர்களது முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் அவை பட்டுவாடா ஆகாமல் திரும்பி விட்டன. எனவே, மேற்படி கடன்தாரர்கள், சக-கடன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில் மேற்குறிப்பிட்டுள்ள கடன் கணக்கிலுள்ள கடன்பாக்கியை வட்டி மற்றும் இதர செலவுகளைச் சேர்த்து, கூட்டாகவோ, தனித்தனியாகவோ இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள் வங்கியிடம் செலுத்த வேண்டியது. தவறினால், மேற்படி சட்டம் பிரிவு 13(4)-ன்கீழ் வங்கிக்கு இருக்கும் அதன் உரிமைகளை பயன்படுத்தி கடன் தொகையையும் வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து வசூலிக்கும் பொருட்டு கடனுக்கு அடமானமாக உள்ள (ஈடாக உள்ள) மேற்காணும் சொத்துக்கள் மீது மேல் நடவடிக்கையை வங்கி எடுக்கும். மேலும் சட்டப்படி வங்கிக்கு இருக்கும் இதர எந்தவொரு தீர்வுக்கும் பாதகமின்றியும் வங்கி தனது அனைத்து உரிமைகளையும் பயன்படுத்தும் என்பதை கூற வேண்டுமென்பதில்லை. மேலும், கடனுக்கு ஈடான சொத்தினை மீட்பதற்கு, மேற்படி சட்டம் பிரிவு 13(8)-ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள கால அவகாசத்தைப்பற்றியும் நீங்கள் கவனத்தில் கொள்ளுமாறு கோரப்படுகிறது. மேலும், மேற்படி சட்டம் 13(13)-ன் கீழ் வழக்கமான அலுவல் நடைமுறைகளைத் தவிர, எழுத்து மூலமான முன் ஒப்புதல் வங்கியிடமிருந்து பெறாமல் நீங்கள் விற்பனை, குத்தகை அல்லது இதர வழிவகைகளில் கடனுக்கு ஈடான சொத்தினை பரிமாற்றம் செய்யவும் தடை செய்யப் படுகிறீர்கள். அவ்வாறான செயல்களில் எதுவும் ஈடுபட்டால் அவை மேற்படி சட்டம் 29-ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

தேதி : 21.09.2022

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் வங்கி லிமிடெட்

IndusInd Bank

எண். 25, ஸ்டெர்லிங் ரீச், A பிளாக்,
3-வது தளம், கதீட்ரல் சாலை,
கோபாலபுரம், சென்னை-600 086

சுவாதீன (POSSESSION) அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கானது)

[பிற்சேர்க்கை -IV மற்றும் அதனுடன் வாசிக்கவேண்டிய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமைஅமலாக்க விதிகள் 8 (1)-ன் படி]
(TPL00040N & TPL00089N)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் படி (சட்டம் 54/2002) (SARFAESI சட்டம்), கீழே கையொப்பமிட்டுள்ளவர், M/s.இண்டஸ்இண்ட் பேங்க் லிட்.-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி பிரிவு 13(2)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, கடன்தாரர்கள் **M/s. வசந்தம் எக்ஸைட் பேட்டரி சேல்ஸ் அண்ட் சர்வீசஸ், பிரதிநிதியாக அதன் உரிமையாளர், திரு.T .சிவாவன் (கடன்தாரர்), திரு. T .சிவாவன் (இணை கடன்தாரர்), திருமதி. மகாலட்சுமி (இணை கடன்தாரர்) & திருமதி. T. வசந்தா (இணை கடன்தாரர்)** ஆகியோருக்கு, 15.05.2021 தேதியிட்ட **கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE)** பதிவு அஞ்சலில் அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அதில் காணும் **10 மே 2021** அன்றுள்ளபடியான அவர்கள் பாக்கியாக செலுத்த வேண்டியுள்ள தொகை **ரூ.59,23,717.91 (ரூபாய் ஐம்பத்தொன்பது இலட்சத்து இருபத்து மூவாயிரத்து எழுநூற்றும் பதினேழு மற்றும் தொண்ணூற்று ஒரு பைசா மட்டும்)** செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர், மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய விதிகள் 9-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை **16 செப்டம்பர் 2022** தேதியில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது **சுவாதீனத்தில்(POSSESSION)** எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள் மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ/நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது M/s.இண்டஸ்இண்ட் பேங்க் லிட்., வங்கிக்குச் செலுத்த வேண்டிய **10 மே, 2021** அன்றுள்ளபடியான கடன் பாக்கி **ரூ.59,23,717.91 (ரூபாய் ஐம்பத்தொன்பது இலட்சத்து இருபத்து மூவாயிரத்து எழுநூற்றும் பதினேழு மற்றும் தொண்ணூற்று ஒரு பைசா மட்டும்)** மற்றும் அதன் மீதான வட்டி மற்றும் இதர கட்டணங்களையும் சேர்த்துச் செலுத்து வதற்குக் கட்டுப்பட்டதாகும்.

அசையா சொத்துகள் விவரம்

நிலம் மற்றும் கட்டடம் கொண்ட சொத்து, மற்றும் அதன் முக்கியப் பகுதிகளும், நிலத்தின் பரப்பளவு 2 குழிகள் மற்றும் 10.25 வீசம் (சுமார் 1521 ச.அடி).மனை எண். 4, கதாஸ்தர் எண்கள். 150 பகுதி, 151 பகுதி, வார்டு எண். M, பிளாக் எண். 5, T S. எண். 29, R.S. எண்.51/8, அமைவிடம் எண். 44 முருங்கப்பாக்கம் வருவாய் கிராமம், முதலியார்பேட்டை கொம்யூன், பாப்பஞ்சாவடி கிராமம், புதுச்சேரி நகராட்சி எல்லை, புதுச்சேரி மற்றும் **எல்லைகள்:** வடக்கு:ஜெகதீஸ்வரி நிலம்; தெற்கு:ஒட்டப்பாளையம் சாலை; கிழக்கு:ராஜேஸ்வரி நிலம் மற்றும் மேற்கு: நாராயணசாமி நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் தற்போதுள்ளது மற்றும் எதிர்காலத்தில் உள்ளது. இது புதுச்சேரி பதிவு மாவட்டம், புதுச்சேரி சார் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.

இடம்-பாண்டிச்சேரி
தேதி-16.09.2022

ஒம்/-
அதிகாரபூர்வ அலுவலர்
இண்டஸ் இண்ட் பேங்க் லிட்-க்காக

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின்,
கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு [Rule 8(1)]

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest (Second) Act, 2002 (Act 54 of 2002)-ன்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான **கீழே கையொப்பமிட்ட உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்,** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் **13(12)** பிரிவு மற்றும் விதி **3**-ன் படி **01.01.2022 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன்பாக்கி தொகையான** 31.12.2021 **அன்றுள்ளபடி ரூ.15,29,273/-** (ரூபாய் பதினைந்து லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து இருநூற்று எழுபத்து மூன்று மட்டும்) **தொகையை அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்: 1.Mr.லோகநாதன்.R,** S/o.Mr.ராஜேந்திரன், **2.Mrs.ஜெயஸ்ரீ,** W/o.Mr.லோகநாதன்.R. **இருவரது முகவரி,** எண்.2/312, மாரியம்மன் கோயில் தெரு, காஞ்சிமங்கலம், தமிழ்நாடு-605102 **ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன்பெற்ற நபர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்பெற்ற நபர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8-ன்படி **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 16.09.2022 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன் பெற்றவர்களோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு** வரவேண்டிய கடன் தொகையான 31.12.2021 அன்றுள்ளபடி **ரூ.15,29,273/-** (ரூபாய் பதினைந்து லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து இருநூற்று எழுபத்து மூன்று மட்டும்) மற்றும் வட்டிக்கு கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்து விபரம்

திண்டிவனம் பதிவு மாவட்டம், மயிலம் சார்-பதிவு மாவட்டம் மற்றும் கிளியனூர் எல்லைக்குட்பட்ட, புதிய சர்வே எண்.368/10- 8720 சதுர அடி, பழைய சர்வே எண்.353/2, கிளியனூர் கிராமம், வானூர் யூனியன், விழுப்புரம் வருவாய் என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 45.5 அடி, தெற்கு பக்கம் 36 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 102.75 அடி, மேற்கு பக்கம் 108 அடி ஆக மொத்தம் **4492** சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் அதனுடன் அனைத்து இதர உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளவைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: மீதமுள்ள மனை, மேற்கு: வைகுந்தவாச பெருமாள் கோயில் மணியா சொத்து, வடக்கு: கணேசன் நஞ்சை, தெற்கு: ரோடு

மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது **Mr.லோகநாதன்-க்கு சொந்தமானது (உங்களில் எண்.1-ல் உள்ள நபர்).**

தேதி: 16.09.2022

Sd/-அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

kotak
Kotak Mahindra Bank

கோடக் மகிந்திரா வங்கி லிமிடெட்

பதிவு அலுவலகம்: எண் 27-BKC, C-27, G-பிளாக், பாந்த்ரா குர்லா வளாகம்,
பாந்த்ரா (கிழக்கு), மும்பை – 400051, மகாராஷ்டிரா, இந்தியா.
பாண்டிச்சேரி கிளை: எண் 188 (பழைய எண் 70),
மிஷன் தெரு, பாண்டிச்சேரி - 605001.

அசையும்/அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் விதிமுறைகளின்படியும் நடைபெற உள்ள அசையாச் சொத்துக்களுக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், M/s ஸ்ரீ வெங்கடேஸ்வரா கேட்டரிங் சர்வீசஸ் மற்றும் பிறரிடமிருந்து கோடக் வங்கி லிட்-க்கு ("ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம்") வர வேண்டியுள்ள **20.09.2022** நாளன்படியான ரூ.**5,17,56,092.85** (ரூபாய் ஐந்து கோடியே பதினேழு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து தொண்ணூற்று இரண்டு மற்றும் பைசா எண்பத்தைந்து மட்டும்) தொகையை **01.07.2021** முதலான மேல் வட்டி, செலவினங்கள், கட்டணங்கள், செலவுகள் ஆகியவற்றுடன் சேர்த்துத் திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் **13.03.2020** அன்று நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** மற்றும் **"மாற்று வழங்கப்பட மாட்டாது"** எனும் முறையில் e-ஏலம் மூலம் **25.10.2022** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. சொத்து விவரம், குறைந்தபட்ச விலை (இதற்குக் குறைவாகச் சொத்து விற்பனை செய்யப்பட மாட்டாது), டேவணித்தொகை (EMD) ஆகிய விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாகவும் குறிப்பாகவும் விவரிக்கப்பட்டுள்ளன.

விற்பனைக்காக உள்ள சொத்தின் விவரம்:

புதுச்சேரி பதிவு மாவட்டம், உழவர்கரை சார்பதிவு மாவட்டம், உழவர்கரை நகராட்சி எல்லைகள், கிராம எண் 38, சாரம் வருவாய் கிராமம், ரெயின்போ நகரைச் சேர்ந்த, 4ஆவது குறுக்குத் தெரு, ஆவணத்தின்படி நிலத்தின் மறுசர்வே எண் 282/3, 282/5, கதவு எண் 128 - 1/2, 128 – 2/2, (ஆவணத்தின்படி), ஒப்படைப்பு ஆவணங்களின்படி மறுசர்வே எண் 282/3, கதவு எண் 128/1/2, பட்டா எண் 2097 மற்றும் மறுசர்வே எண் 282/5/A. (ஒப்படைப்பின்படி) **அளவு:** கிழக்கு மேற்காக – 30 அடி, தெற்கு வடக்காக – 60 அடி, மொத்தப் பரப்பு 1800 சதுர அடிக் கொண்ட மனை எண் 4 மற்றும் கிழக்கு மேற்காக – 30 அடி, தெற்கு வடக்காக – 60 அடி, மொத்தப் பரப்பு 1800 சதுர அடிக் கொண்ட மனை எண் 5. **மொத்த அளவு:** கிழக்கு மேற்காக – 60 அடி, தெற்கு வடக்காக – 60 அடி, மொத்தப் பரப்பளவு 3600 சதுர அடிக் கொண்ட மனை மற்றும் வீடு உட்பட. இத்துடன் மின்சார சேவை இணைப்பு (பாலிசி எண் 05-25-02-0151), நீர் சேவை இணைப்பு (எண் 36-31-20/559) சேர்த்து. இதன் கதவு எண் 3. எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: மனை எண் 6-இல் உள்ள வீடு, மேற்கு: மனை எண் 3-இல் வீடு, தெற்கு மற்றும் வடக்கு: மனை எண் 27 மற்றும் மனை எண் 1 ஆகியவற்றில் உள்ள வீடு.

இத்துடன் தற்போதும் எதிர்காலத்திலும் தரையோடு இணைக்கப்பட்டுள்ள அனைத்து கட்டுமானங்கள் அல்லது தரையோடு நிரந்தரமாகப் பிணைக்கப்பட்டுள்ள அனைத்தும் உடன் இணைந்துள்ள அனைத்துப் புழக்க / வழக்க உரிமைகளுடன் சேர்த்து.

குறைந்தபட்ச விலை - ரூ.**2,38,56,000/-** மற்றும் டேவணித்தொகை **(EMD)** – ரூ.**23,85,600/-**

E-ஏலம் மூலம் நடைபெற உள்ள அசையாச் சொத்துக்கான விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

சொத்துக்களின் ஆய்வு: ஆர்வமுள்ள தரப்பினர் **24.10.2022** அன்று முற்பகல் **11** மணிக்கும் பிற்பகல் **3** மணிக்கும் இடையில் சொத்துக்களை ஆய்வு செய்யலாம். டேவணித்தொகை (EMD) சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்: **24.10.2022** மாலை **5** மணி வரை.

1. இந்த ஏல விற்பனையானது KMBL-இன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநரான M/s.ஆக்ஷன் டைகர் என்கிற அகமதாபாத், குஜராத்-380006 எனும் இடத்தில் அலுவலகம் கொண்டுள்ள நிறுவனத்தின் வாயிலாக **"இணையவழி E-ஏலம் / ஏலக்கோரல்"** முறையில் **www.AuctionTiger.net** இணையத்தளத்தில் நடத்தப்படும். உதவி எண்கள்:- திரு.பிரவீன் குமார் - **7961200515 / 9722778828,** உதவி மின்னஞ்சல் முகவரி: **sales@AuctionTiger.net.**
2. ஏல விற்பனையானது **25.10.2022** அன்று முற்பகல் **11** மணிக்கும் நண்பகல் **12** மணிக்கும் இடையில் நடைபெறும். தீர்மானிக்கப்பட்ட முடிவு நேரத்துக்கு முன்பான கடைசி 5 (ஐந்து) நிமிடத்தில் ஏலம் கோரப்பட்டால் மேலும் ஐந்து நிமிடங்கள் தானாக நீட்டிக்கும் முறை கடைப்பிடிக்கப்படும்.
3. சொத்தில் குறிப்பிட்டுள்ள சமர்ப்பிக்கப்படும் ஏலப்புள்ளித் தொகையானது அதிகாரப்பூர்வ அலுவலரால் தீர்மானிக்கப்பட்ட குறைந்தபட்ச விலைக்குக் கூடுதலாக இருத்தல் வேண்டும். மேலும் ஏலதாரர் தனது விலைகோரலை ரூ.**50,000/-** (**ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்**) தொகையின் மடங்குகளில் உயர்த்திக் கோருதல் வேண்டும்.
4. சொத்துக்களானது அதிகாரப்பூர்வ அலுவலரால் தீர்மானிக்கப்பட்ட குறைந்தபட்ச விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது. குறைந்தபட்ச விலைக்குக் குறைவாகக் கோரப்படும் ஏலப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட டேவணித்தொகைகள் பறிமுதல் செய்யப்படும்.
5. வெற்றி பெறும் ஏலதாரர் வாங்கும் விலையில் 25% தொகையை (ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்ட டேவணித்தொகை உட்பட) E-ஏல விற்பனை நடைமுறை முடிவடைந்த 24 மணி நேரத்துக்குள் செலுத்த வேண்டும். வாங்கும் விலையில் மீதமுள்ள 75% தொகையானது வங்கியால் விற்பனை உறுதி செய்யப்பட்ட 15 (பதினைந்து) நாட்களுக்குள் அல்லது முழுக்க முழுக்க அதிகாரப்பூர்வ அலுவலரின் விருப்புரிமையின் பேரில் எழுத்துப்பூர்வமாக அளிக்கப்படக்கூடிய ஒப்புதலின்படியான கால நீட்டிப்புக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறினால், வாங்குநரால் ஏற்கெனவே செலுத்தப்பட்ட / சமர்ப்பிக்கப்பட்ட தொகைகளை வங்கி பறிமுதல் செய்யும். உச்சபட்ச ஏலதாரர் 24 மணி நேரத்துக்குள் சட்டப்படியான 25% தொகையைச் செலுத்தாவிட்டால் அவரது ஏலக்கோரல் ரத்துச் செய்யப்பட்டு அடுத்த நிலையிலுள்ள உச்சபட்ச ஏலதாரருக்குச் சொத்தை வாங்க வாய்ப்பு அளிக்கப்படும்.
6. ஏலதாரர்கள் தங்கள் ஏலப்புள்ளிகளை சமர்ப்பித்து விற்பனை நடைமுறையில் கலந்து கொள்ளும் முன்னர் மேற்கூறிய இணையத்தளத்துக்குச் சென்று விற்பனையின் விரிவான விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
7. ஏலப்புள்ளிகள் ஆன்லைன் / நேரடி படிவத்தில் மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் (கள்) உரிய விவரங்களுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டும். வேறு எந்த வடிவத்திலும்/ முழுமையற்ற ஏலங்களிலும் சமர்ப்பிக்கப்பட்ட ஏலங்கள் நிராகரிக்கப்படும்.
8. ஏலப்புள்ளிகள் அனைத்தும் பின்வரும் வாடிக்கையாளர் விவர ஆவண (KYC) நகல்களுடன் இணைந்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவையாவன: (i) நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை (ii) ஆதார் அட்டை / கடவுச்சீட்டு (iii) தற்போதைய முகவரியின் சான்று (iv) செல்லத்தக்க மின்னஞ்சல் முகவரி (v) தொடர்பு எண்கள் (கைப்பேசி / தரைவழி) முதலானவை. இந்த ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்கள் மேற்குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலே ஒவ்வொரு சொத்துக்கும் / இனத்துக்கும் எதிரே குறிப்பிடப்பட்ட டேவணித்தொகை **'KOTAK MAHINDRA BANK LTD'** எனும் பெயரிலான கேட்பு வரைவோலை அல்லது காசோலை வடிவில் **புதுச்சேரியில் மாற்றத்தக்க வகையில்** செலுத்தப்பட வேண்டும்.
9. ஆர்வமுள்ள ஏலதாரர் டேவணித்தொகை செலுத்தியதற்கான அத்தாட்சியை வங்கி ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலான வடிவில் வங்கியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
10. ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடமிருந்து / சேவை வழங்குநரிடமிருந்து வரும் தொடர்புடைய தகவல்கள் அனைத்தும் e-மின்னஞ்சல் மூலம் மட்டுமே வரும் என்பதால் ஏலதாரர்கள் செல்லத்தக்க மின்னஞ்சல் முகவரியைக் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.
11. விருப்பமுள்ள ஏலதாரர்கள் e-ஏலத்தில் கலந்து கொள்வதற்கான இணையவழி / நேரடிப் பயிற்சி பெறச் சேவை வழங்குநரை மேற்கூறிய தொடர்பு விவரங்கள் அடிப்படையில் தொடர்பு கொள்ளலாம்.
12. எந்தத் தொழில்நுட்ப இடையூறுகளுக்கும் / மின்சாரச் செயலிழப்புக்கும் இது போன்ற பிறவற்றுக்கும் அதிகாரப்பூர்வ அலுவலரோ ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனமோ சேவை வழங்குநரோ பொறுப்பாக மாட்டார்கள்.
13. வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித்தொகைகள் e-ஏல நடைமுறைகள் முடிவடைந்த நாளிலிருந்து 7 வேலை நாட்களுக்குள் திருப்பித் தரப்படும்.
14. விற்பனையானது வங்கியின் உறுதிப்படுத்துதலுக்கு உட்பட்டது. கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் மொத்த நிலுவைத்தொகையையும் e-ஏலத்துக்காகத் தீர்மானிக்கப்பட்டுள்ள நாளுக்கும் நேரத்துக்கும் முன்னர் செலுத்தி விட்டால் விற்பனை நடத்தப்பட மாட்டாது.
15. அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உச்சபட்சமாகத் தெரிய வந்த தகவல்களின் அடிப்படையில் மேற்கூறிய சொத்து மீது வேறெந்த வில்லங்கமும் இல்லை. எனினும் இவற்றின் உரிமை / வில்லங்கங்கள் முதலானவை தொடர்பாக ஆர்வமுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் தாங்களே சொந்தமாக ஆழ்ந்து விசாரித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேற்கூறிய அடமானச் சொத்து மீது ஏதேனும் ஒத்தி, பற்று, வில்லங்கம் போன்றவை இருந்தாலோ சொத்து வரி அல்லது அரசுக்கோ மற்றவர்களுக்கோ செலுத்த வேண்டிய வேறு ஏதேனும் நிலுவைகள் இருந்தாலோ அதற்கு அதிகாரப்பூர்வ அலுவலர் பொறுப்பாக மாட்டார். சொத்தானது ஈடு பெற்றுக் கடனளித்தவருக்குத் தெரிந்த அல்லது தெரியாத தற்பொழுது மற்றும் எதிர்கால வில்லங்கங்களுடனே விற்பனை செய்யப்படுகிறது.
16. எந்தக் காரணமும் தெரிவிக்காமல் (எந்தச் சொத்தின்) எந்த ஒப்பந்தப்புள்ளியையும் / ஒப்பந்தப்புள்ளிகளையும் ஏற்க அல்லது தள்ளுபடி செய்ய அல்லது e-ஏலத்தை ரத்துச் செய்ய / தள்ளி வைக்க அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உரிமை உண்டு.
17. விற்பனை விதிமுறைகளுக்கு இணங்க அதிகாரப்பூர்வ அலுவலரானவர் வாங்குநரின் பெயருக்கு 'விற்பனைச் சான்றிதழ்' வெளியிடுவார். முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணங்கள், போக்குவரத்துச் செலவுகள், VAT, TDS, GST முதலான தொடர்புடைய செலவுகள் அனைத்தும் வாங்குநரையே சாரும்.
18. விற்பனையானது SARFAESI சட்டம் / விதிகள் 2002-இன் கீழான கட்டுப்பாடுகளுக்கும் மேற்கண்ட நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
19. சொத்தை ஆய்வு செய்வது உட்பட ஏலம் தொடர்பான மேற்கொண்டு எந்தத் தகவலுக்கும் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் வங்கியின் **@WWW.Kotak.com** என்ற இணையத்தளம் அல்லது எந்த வேலை நாளிலும் காலை **10** மணிக்கும் மாலை **5** மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள்: **திரு.ஸ்ரீதரா S**, தொ.பே. # **9916165915**, **ஜெயசீலன்**, தொ.பே. # **8940665674** மற்றும் **திரு. அப்துல் ஜெ.**, தொ.பே. # **8939732650**.

நாள்: 21.09.2022
இடம்: பாண்டிச்சேரி

ஒம்/-
(அதிகாரப்பூர்வ அலுவலர்)
கோடக் மகிந்திரா வங்கி

DINAMANI, Villupuram. RNI Reg. No. TNTAM/2013/52752. Published by **R.K. Jhunjhunwala** on behalf of Express Publications (Madurai) Private Ltd., at 264/5, Gingee Road, T.Mettuppalayam Post, Vikravandi Taluk, Villupuram - 605 602 and printed by him at Sri Ambal Printers, 264/5, Gingee Road, T.Mettuppalayam Post, Vikravandi Taluk, Villupuram-605 602.
ஆசிரியர்: **கே. வைத்தியநாதன்** - Editor: **K.Vaidiyanathan** Villupuram. Vol. 10, No.263. COPYRIGHT: Express Publications (Madurai) Private Ltd., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.

epaper.dinamani.com